Registered as a Newspaper




# உதயன்

விலை ரூபா 3·50




சுடர் 5: பிரமோதூத ஞூ ஆனி மீ 7 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 27 (21 · 06 · 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 118

# ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கு தமிழகத்தில் இனி இடமில்லை!

## அனைவரையும் கைது செய்யுமாறு கருணாநிதி பொலீஸாருக்கு உத்தரவு

சென்னை, ஜூன் 21

ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கு இனிமேல் தமிழகத்தில் இடமில்லை. அங்கு தங்கியுள்ள அனைவரையும் சுற்றி வளைத்துக் கைது செய்து, அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றும்படி தமிழக முதலமைச்சர் கருணாநிதி பொலீஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த நடவடிக்கையின்போது இயக்க வேறுபாடு எதுவும் காட்டப்படக் கூடாது என்றும் முதலமைச்சர் பொலீஸாரைப் பணித்திருக்கிறார்.

புதுடில்லியில் இந்தியப் பிரதமரைச் சந்திக்கச் சென்றிருந்த தமிழக முதல்வருக்கு, சென்னை கோடம்பாக்கம் கொலைச் சம்பவம் பற்றி செவ்வாய்க்கிழமை இரவே உடனடியாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து போராளிகளைக் கைது செய்யும் உத்தரவை திரு. கருணாநிதி தமிழ்நாடு உள்துறைச் செயலாளர் திரு. நாகராஜனுக்கு அனுப்பினார்.

இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கைச் சந்தித்த பின்னர் நேற்றுப் பகல் சென்னை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## போராளிகளின் இடங்களில் தீவிர தேடுதல் முயற்சி

சென்னை, ஜூன் 21

தமிழகத்தில் குடியமர்ந்து இருக்கும் அனைத்துத் தமிழ்ப் போராளிகளின் இல்லங்களிலும் அலுவலகங்களிலும் தேடுதல் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

- இப்படி மாநில உள்துறைச் செயலாளர் திரு நாகராஜன் தெரிவித்தார்.

கோடம்பாக்கம் கொலை தொடர்பாகப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் டபிள்யு ரி. தேவாரம் தலைமையில் செயற்படை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

கொலையாளிகளைப் பிடிப்பதற்கு மாநிலப் பொலீஸாருடன் மத்திய - மாநிலப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து செயற்படுகின்றனர் என்றும் -

இறந்தோரின் குடும்பங்களுக்கு முழுப்பாதுகாப்பும் வழங்கப்படுவதாகவும் அவர் சொன்னார். (உ - எ)

## 600 ஈழத்தமிழ் போராளிகள் தமிழகத்தில் கைதாகினர்

நேற்று பிற்பகல் வரை தமிழகத்தில் இலங்கைத்தமிழ் போராளிகள் அறுநூறுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 110பேர் சென்னை நகரில் மட்டும் கைது செய்யப்பட்டனர் ஏனையோர் திருச்சி, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கைது செய்யப்பட்டனர்

கைது செய்யப்பட்டவர்களில் பெண்கள், குழந்தைகள் எவரும் இல்லை என்று தமிழக மாநில உள்துறைச் செயலாளர் நாகராஜன் சொன்னார்.

இயக்கவாரியாக கைதானோர் எண்ணிக்கை வருமாறு

விடுதலைப்புலிகள் - 14,
ஈ.பி.ஆர்.எல்.எவ் - 28
ஈ.என். டி. எல். எவ். - 48,
ரெலோ - 54,
புளொட் - 34,
ஈரோஸ் - 3.

கோடம்பாக்கம் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் தமிழகத்தில் இருந்து தப்பிச் செல்லாதபடி பார்த்துக் கொள்ளும்படி எல்லைப் பாதுகாப்புப் படைக்குத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. (உ-எ)

## அந்த வேளை வெளியே போனதால் பிரேமச்சந்திரன் எம்.பி. மயிரிழையில் தப்பினார்!

சென்னை கோடம்பாக்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்ற சம்பவத்தில் ஈ. பி.ஆர்.எல்.எவ் வைச் சேர்ந்த எம். பி திரு. கே பிரேமச்சந்திரன் மயிரிழையில் உயிர் தப்பினார் என்று தெரிய வருகிறது.

செவ்வாய் மாலை நடைபெறவிருந்த கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக திரு. பிரேமசந்திரனும் சென்னை வந்திருந்தார்.

ஆனால்சம்பவம் நடைபெற்ற சமயம் வேறு விடயமாக கூட்டம் நடைபெற்ற இடத்திலிருந்து சற்றுத்தூரத்தில் உள்ள வேறு ஓர் இடத்துக்கு அவர் சென்றிருந்தார்.

அத்த சமயமே தாக்குதல் சம்பவம் நடைபெற்றது. அதனால் அவர் சூட்டுக்கு இலக்காகாமல் உயிர் தப்பினார்.

இதே போல—

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் அந்த இடத்திலிருந்த பத்மநாபாவின் மனைவியும் சம்பவம் நடைபெறும் நேரத்துக்குச் சற்று முன்னர் தான் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பத்மநாபாவுக்கு இந்த விபரீதம் ஏற்பட்டது ஏன்?

### கருணாநிதி கூறும் காரணம்

திரு. மத்மநாபா யாருக்கும் தெரியாமல் தன்னுடைய பாட்டில் 'திடீரென சென்னைக்கு வந்ததால்தான் அவருக்கு இந்த விபரீதம் ஏற்பட்டது.

- இவ்வாறு கூறினார் கலைஞர் கருணாநிதி.

திரு. பத்மநாபா தனக்குப் பாதுகாப்புக்கேட்டிருப்பாரானால் அவருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும் அவரைக் காப்பாற்றியும் இருக்க முடியும்.

ஆனால் அவர் திடீரென யாருக்கும் தெரியாமல் சென்னைக்கு வந்ததால்இந்த விபரீதம் ஏற்பட்டு விட்டது.

- என்று கருணாநிதி மேலும் கூறினார். (உ-எ)

## புலிகளுக்கு தொடர்பில்லை; லண்டனில் கிட்டு அறிவிப்பு

லண்டன், ஜூன் 21

ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் 16 பேர் சென்னையில் கொலைசெய்யப்பட்ட சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு ஏதும் இல்லை.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. கிட்டு லண்டனில் தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்துவதற்காக இந்தச் சம்பவத்தை விடுதலைப்புலிகளுடன் தொடர்புபடுத்தி வதந்திகள் பரப்பப்பட்டிருக்கின்றன என்று அவர் சொன்னார். (உ-9)

## யோகசங்கரி எம்.பியும் மரணம்

சென்னை, ஜூன் 21

யாழ் மாவட்ட எம். பியும் ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகருமான திரு. கே. யோகசங்கரி சென்னை அரசு மருத்துவ மனையில் நேற்று மரணமானார்.

கோடம்பாக்கத் தாக்குதலில் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் திரு யோகசங்கரியும் ஒருவர் என்று நேற்றுத் தெரியவந்தது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்தது.

காயமடைந்தவர்களில் சிலர் பின்னர் சென்னை மருத்துவமனையில் காலமானார்கள்.

இறந்தவர்களில் இரண்டு பெண்கள் உட்பட 14 பேர் ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் ஆவர்.

ஏனைய இருவரும் உள்ளூர் வாசிகள் ஆவர்.

திரு. பத்மநாபா உட்பட இறந்தவர்களின் சடலங்கள் சென்னை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

### கூட்டம் நடந்த வேளையில்

இதேவேளை —

ஈ. பி ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் பத்மநாபா உட்பட 14 பேர் கொல்லப்பட்ட விதம் பற்றி மேலும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

சென்னை, கோடம்பாக்கம் குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பத்மநாபா உட்பட ஈ. பி. ஆர். எல். எவ் முன்னணித் தலைவர்கள் பலர் கூட்டம் ஒன்றை நடத்திக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### கலைஞரை பதவி விலக கோரிக்கை

சென்னை, ஜூன் 21

சென்னை கோடம்பாக்கம் சம்பவத்துக்கு பொறுப்பேற்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தமது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும்.

அ. தி. மு. க மற்றும்இந்திரா காங்கிரஸ் கட்சி ஆகியவை இக்கோரிக்கையை கூட்டாக முன்வைத்திருக்கின்றன. [உ]

## பலாலியிலிருந்து தொடர்ச்சியாக ஷெல் - ஹெலி தாக்குதல்கள்

### தெல்லிப்பழை, மயிலிட்டியில் பொம்மர் குண்டு வீச்சு

காங்கேசன்துறை, ஜூன் 21

பலாலி இராணுவ முகாமில் இருந்து செவ்வாய் மாலை முதல் நேற்றுப் பகல் வரை ஷெல்வீச்சுகளும், ஹெலித் தாக்குதல்களும் தொடர்ந்து இடம்பெற்றன.

முகாமைச் சுற்றி வரவுள்ள தையிட்டி, வறுத்தலைவிளான், கட்டுவன், காங்கேசன்துறைப் பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றன. இரவு முழுவதும் ஹெலி வேட்டுக்களும் தாராளமாகத் தீர்க்கப்பட்டன.

நேற்றுக் காலை பொம்மரில் இருந்து குண்டுகள் வீசப்பட்டன.

அப்பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்ததால் உயிர்ச் சேதம் குறைவாகவே இருந்தன. ஆனால் வீடுகள் பல சேதமுற்றன.

அதேநேரம் மாதகல், சேந்தான் குளம் கடற் பகுதிகளில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தத்தை உடனடியாக நிறுத்த இந்தியா கடிதம்

புதுடில்லி, ஜூன் 21

சண்டையை உடனடியாக நிறுத்தி அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி இந்தியா, இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இந்த வேண்டுகோளை இந்திய அரசு உத்தியோகபூர்வமாக கொழும்புக்கு கடித மூலம் அனுப்பி வைத்துவிட்டதாக புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரதமர் வி. பி. சிங் நேற்று முன்தினம் மாநில முதலமைச்சர்கள் மற்றும் நேசக் கட்சிகளின் தலைவர்களுடன் இலங்கை நெருக்கடி பற்றி பேச்சுக்கள் நடத்தினார் அல்லவா!

அதைத் தொடர்ந்தே இந்த வேண்டுகோளை இந்திய அரசு விடுத்துள்ளது.

[முந்திய செய்திகள் 2ஆம், 3ஆம் பக்கங்களில்]

### 10 சிப்பாய்கள் வடக்கில் பலி!

கொழும்பு, ஜூன் 21

கடந்த 24 மணித்தியாலங்களில் யாழ். மாவட்டத்தில் நடந்த மோதல்களில் ஆயுதப் படையினர் பத்துப்பேர் உயிரிழந்தனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

### சுப நேரம்

21 - 6 - 90

வியாழக்கிழமை ஆனி 7 சுபநேரம்!

7-24—8-54

இராகுகாலம்

01-24—2-54

இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

## ஈழத் தமிழர் பிரச்சினை; சிங்கிற்கு ராஜீவ் கடிதம்

புதுடில்லி, ஜூன் 21

மோசமடைந்து வரும் இலங்கை தமிழர் நெருக்கடி நிலை குறித்து முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ராஜீவ் காந்தி பிரதமர் வி. பி. சிங்குக்கு இரண்டு கடிதங்களை எழுதியிருக்கிறார்.

இக் கடிதங்களில் இலங்கைத் தமிழரின் பாதுகாப்புக் குறித்து திரு. ராஜீவ் காந்தி கவலை தெரிவித்து இருக்கிறார்.

இதனிடையில் இந்திரா காங்கிரஸ் பேச்சாளர் புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் சொன்னதாவது:

இலங்கைத் தமிழரின் பாதுகாப்புக் குறித்து அமைதி உடன்பாட்டின்படி போதிய ஏற்பாடுகளைச் செய்யாமல் அமைதிப்படையை இந்திய அரசு அவசரப்பட்டு வாபஸ் வாங்கிக் கொண்டதன் மூலம் சரித்திரத் தவறை இழைத்துவிட்டது - என்றார்.

## குண்டு வீச்சுத் தாக்குதலை கண்டிக்கிறார் கருணாநிதி

சென்னை, ஜூன் 21

இலங்கையில் பொது மக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது இலங்கை இராணுவம் நடத்தி வரும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி கண்டித்துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்காது காலத்தை வீணாக்கி இப்படியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்து வருவதும் கண்டிக்கத் தக்கது என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார். (ஒ-எ)

## குடாநாட்டு பஸ்சேவை நேற்று செயல் இழந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் குடாநாட்டு பஸ் சேவைகள் நேற்று முற்றாக ஸ்தம்பித்தது.

டீசல் இல்லாத காரணத்தால் மட்டுப்படுத்தப் பட்ட சேவையை நடத்தி வந்த போக்குவரத்துச் சபை டீசல் முடிவடைந்ததை அடுத்து சேவையை முற்றாக நிறுத்தி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முல்லைத்தீவு டிப்போவில் இருந்து இ.போ.ச. பஸ் யாழ்ப்பாணம் வந்து திரும்பிச் செல்வதுகுறிப்பிடத்தக்கது.

இதனிடையில் குறிப்பிட்ட சில இடங்களுக்கான மினி பஸ் சேவைகள் நல்லூரில் இருந்து நடைபெறுகின்றன. [ஒ-3]

## சுன்னாகத்தில் ஹெலித் தாக்கு!

நேற்றுப்பகல் 2 மணியளவில் சுன்னாகம் சந்தைப் பகுதியில் ஹெலியில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு வியாபாரி உட்படப் பலர் காயமடைந்தனர்.

திடீரென ஹெலியில்இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த செல்லையா ஸ்ரோர்ஸ் முதலாளி கந்தையா செல்லையா [65 வயது] என்பவர் உடனடியாக மானிப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப் பட்டார்.

ஆனைக்கோட்டை, தொண்டமானாறு மற்றும் யாழ். நகரை அண்டிய பகுதிகளிலும் ஹெலியிலிருந்து தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன [உ-9-3]

## காரைநகரில் ஷெல் வீச்சு; இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் வெளியேற முயன்ற சடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமார் இரண்டு மணி நேரமாகக் கடும் மோதல் இடம்பெற்றது.

அதனை அடுத்து முகாமிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்களும், பீரங்கித் தாக்குதல்களும் மேற் கொள்ளப்பட்டன. துறைமுகப் பகுதியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. ஷெல்லுக்கு தோப்புக்காட்டைச் சேர்ந்த மணிமாறன் [வயது 21] என்ற இளைஞர் மரணமானார்.

கடந்த சனியன்று இடம்பெற்ற மோதலை அடுத்து முகாமை அண்டிய பகுதி மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்திருந்தனர்.

அதனால் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது. [ஒ]

## கிளிநொச்சி இராணுவம் இரவில் ஷெல் தாக்கு

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து இரவு நேரங்களில் குடிமனை உள்ள பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

பகல் நேரங்களில் மக்கள் நகரப் பகுதிக்கும், சந்தைக்கும் போய்வரக் கூடிய நிலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



இந்திரா காங்கிரஸும், ஜெயலலிதாவும் கருணாநிதியைத் தருணம் பார்த்துக் கவிழ்க்கக் காத்துக்கொண்டிருக்கினம் எண்டு சொல்லுங்கோ... !

## இலங்கை உதவி கோருகிறது

புதுடில்லி, ஜூன் 21

வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்ன வெளிநாட்டுத் தூதர்களுக்கு விடுத்த வேண்டுகோளில் மருந்து வகைகள், உணவுப் பொருள்களை தத்தமது நாடுகளில் இருந்து பெற்று அனுப்புமாறு கோரியிருக்கிறார்.

தற்போதைய நெருக்கடியில்பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவே இந்த நடவடிக்கை என்று அறிவிக்கப்படுகிறது. (அ-எ)

## இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை உடனடியாக நிறுத்த இந்தியா கோருகிறது

புதுடில்லி ஜூன் 21

இலங்கையில் அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகள் போராளிகளுக்கும் இடையே நடைபெறும் சண்டை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று இந்தியா கேட்டுள்ளது.

இத்தகவலை புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் கடந்த செவ்வாய் மாலை வெளியிட்டார்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் வன்முறை அதிகரித்து வருவது குறித்தும் விமானத் தாக்குதல் நடத்துவது குறித்தும் இந்தியா கவலை அடைந்துள்ளது.

இலங்கையில் நடைபெறும் சம்பவங்களை இந்தியா உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வருகிறது.

இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு இசைந்த கட்டமைப்புக்குள் தமிழ் மக்களின் நியாயமான விருப்பங்கள் நிறைவேற வன்முறை, நெருக்குதல் அற்ற சூழலில் ஜனநாயக அமைப்பு முறை மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

படைபலத்தை அதிக அளவில் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். அப்பாவி மக்கள் உயிரிழப்பதை இருதரப்பினரும் தவிர்க்கவேண்டும்.

இரசாயன ஆயுதம் பயன்படுத்துவதாக வரும் தகவல் கவலையளிப்பதாக உள்ளது. இப்படி அந்த அதிகாரி சொன்னார். [அ-எ]

## இன்றைய போட்டிகள்

மிலான், ஜூன் 21

இன்று வியாழன் நடைபெறவுள்ள உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் வருமாறு:

'இ' பிரிவு:

பெல்ஜியம் எதிர் ஸ்பெயின் (இடம்; வெரோனா)

தென் கொரியா எதிர் உருகுவே (இடம்; யுடின்)

'எப்' பிரிவு:

இங்கிலாந்து எதிர் எகிப்து (இடம்: காக்லியாறி)

அயர்லந்து எதிர் ஒல்லாந்து (பலேர்மோ)

(அ-எ)

## கொலைச் சம்பவத்தை கருணாநிதி கண்டிக்கிறார்

புதுடில்லி ஜூன் 21

கோடம்பாக்கம் கொலைச் சம்பவம் குறித்து தமிழக முதலமைச்சர் கருணாநிதி கவலையும் கண்டனமும் தெரிவித்திருக்கிறார்.

"தமிழ்ப் போராளிகளிடையே சகோதர யுத்தம் நடைபெறுவதைத் தவிர்க்க ஆரம்பத்தில் இருந்தே நான் முயற்சி எடுத்து வந்திருக்கிறேன். ஆனால் சகோதர யுத்தம் தமிழ் நாட்டிலேயே நடத்தப்பட்டு விட்டது" - என்று திரு கருணாநிதி புதுடில்லியில் இருந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் பிரமுகர் கருப்பையா மூப்பனாரும் கொலைச் சம்பவம் குறித்து கவலையும் கண்டனமும் தெரிவித்தார்.

(அ-எ)

## மத்திய அரசும் கண்டனம்

புதுடில்லி, ஜூன் 21

சென்னையில் ஈ பி ஆர் எல் எப் பிரமுகர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து இந்திய மத்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி பொலீஸாரை மத்திய அரசு பணித்து உள்ளது என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [அ-எ]

## ஈழத் தமிழ் அகதிகளுக்கு தமிழகத்தில் கூடுதல் பாதுகாப்பு

சென்னை ஜூன் 21

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கும்படி முதலமைச்சர் கருணாநிதி பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஈ. பி. ஆர். எல். எப் பிரமுகர்கள் கொலையுண்ட சம்பவத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## சமையற்காரர் தேவை

அனுபவம் உள்ள சமையற்காரர் ஒருவர் உடனடியாகத் தேவை. தேநீர் தயாரித்தல் உட்பட சமையல் பாகங்களைச் சுத்தமாகச் செய்யக் கூடியவர் விரும்பத்தக்கது. தங்கியிருந்து வேலை செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

தாமதியாது நேரில் வரவும்.

உதயன் பத்திரிகை நிறுவனம்
(கைலாசபிள்ளையார் கோவில் அருகே)
நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாண நகரப் பகுதியில் இப்போது நிலவும் சூழ்நிலை காரணமாக அங்கு அமைந்துள்ள எமது அலுவலகத்தை, மிகவும் பாதுகாப்பான வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதற்கான பணியில் நாம் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

அலுவலகத்திற்கான புதிய இடத்தை ஏற்பாடு செய்ததும், அது குறித்து, பத்திரிகைகள் மூலம் எங்கள் வாடிக்கையாளருக்கு அறியத் தருவோம் அதுவரையும் இப்போது ஏற்பட்டுள்ள சிரமத்தைப் பொருட்படுத்தாது எங்களுடன் ஒத்துழைக்குமாறு வாடிக்கையாளர்களை மிக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகத்தினர்.

[சி4757]

## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வப் புதல்வன் ★ விதூசன் ★

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த விஜயகுமாரன் தம்பதிகளின் செல்வப் புதல்வன் விதூசன் (விதூஷ்) இன்று (21 - 06 - 90) தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை கனடாவில் இருக்கும் டடி, கொக்குவிலில் இருக்கும் மமி, அம்மம்மா, லீலா அன்ரா, டாலி அன்ரா, குட்டி அன்ரா, சிவாநந்தன் வட்டுக்கோட்டையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, ஜேர்மனியில் இருக்கும் பெரியப்பா, பெரிய அன்ரா, அண்ணண்ணா, பெரிய அங்கிள் (சுவிஸ்), ஐயர் அங்கிள் (லண்டன்) குமா அங்கிள், குட்டி அங்கிள் (சென்னை), சலூதி சித்தா மற்றும் தாத்தாமார், அம்மம்மாமார், ஐயாமார், அண்ணிமார், பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[13514]

## The Lions Club of Jaffna

This is to inform all members of the Lions Club and the Invitees that the meeting scheduled to be held at Hotel Gnanams on Saturday the 23rd June has been postponed.

President,
Steering Committee

[C-4755]

## 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



சுப்பையா சத்தியானந்தம் (அப்புச்சி)

தாயின் மடியில்: 17 - 06 - 1963

இறைவன் அடியில்: 12 - 07 - 1987

திதி: 21 — 06 — 1990

அன்பின் செல்வமே அப்புச்சி

நீ மறைந்து மூன்று ஆண்டுகள், சென்றாலும் எம் இதயங்களில் வாழ்ந்து கொண்டேயிருக்கிறாய் உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரார்த்திப்பவர்கள்:
அம்மா, அண்ணன்மார், அண்ணிமார்,
பெறாமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

[சி-4756]

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 04 - 09 - 1948

உதிர்வு: 27 - 06 - 1984

திதி: 21 — 06 — 1990

உயர்திரு.

### பொன்னம்பலம் பத்மநாதன்

(பொலீஸ் சாஜன்ட் மேஜர், காங்கேசன்துறை)

அப்பா! என்றழைக்க எமக்கிங்கு யாருமில்லை
ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறவில்லை நம்சோகம்
ஆறாய் நீர் சொரிந்து நிற்கின்றோம் உம் பிரிவால்
பண்புடன் வளர்த்தீரே பாசமுடன் காத்தீரே
இன்று நம்மை விட்டு சென்றீரே தூரதேசம்
ஆண்டுகள் தான் கழிந்தாலும்
போகாது உம் நினைவு எம்மை விட்டு

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை, சகோதர, சகோதரி,
மைத்துனர், மைத்துனி, மாமன்,
மாமி, மருமக்கள், பெறாமக்கள்.

"பத்மஇல்லம்"
இறங்காணியவளவு,
காங்கேசன்துறை.

(3855)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உலக நாடுகள் கவனத்திற்கு

வடக்கு-கிழக்கில் யுத்தச் சூழ்நிலை நிலவி வருவதாக ஜனாதிபதி பிரேமதாசா கண்டியில் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். தமிழர்களுக்கு எதிராக பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் பிரகடனப் படுத்திய யுத்தத்தை ஜனாதிபதி ஊர்ஜிதப் படுத்தியிருக்கிறார். அவ்வளவு தான்.

இந்த யுத்தத்துக்கு மேலதிகமாக 500 கோடி ரூபா செலவாகும் என்ற கணக்கையும் அவரே தெரிவித்திருக்கிறார். இப்போதுள்ள யுத்தக் கப்பல்கள், யுத்த விமானங்கள் போதா வென்று மேலும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக 27 கோடி ரூபா நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டதன் பின்னர்தான் பிரேமதாசா 500 கோடி ரூபா கணக்குக் கதை சொல்லியுள்ளார்!

வேறு ஒரு நாட்டுடன் போர் புரிவதற்கு ஆயத்தம் செய்யப்படுவது போல, தமிழர்களை அழிப்பதற்கு அரசாங்கம் போர்ச் செலவினங்களை அதிகரித்து வருகிறது. விடுதலைப் புலிகளைக் கெரில்லா இயக்கம் என்றும், பயங்கர வாதிகள் என்றும் மீண்டும் வர்ணிக்கத்தொடங்கி விட்ட அரசு, அதனுடன் போராடவா இத்தனை கோடி ரூபாவைச் செலவிடுகிறது? இல்லவே இல்லை! தமிழர்களை அழிக்க வேண்டும் இல்லையேல் அடக்கி ஆள வேண்டும் என்பதற்காகவே இத்தனை கோடியையும் அரசு செலவிடப்போகிறது.

டி. எஸ்., பண்டார நாயக்கா, சிறிமாவோ, ஜே. ஆர்., பிரேமதாசா யாராக இருந்தாலும் சிங்களாதிபத்திய மேலாண்மை வெறி அவர்களை விட்டு வைக்காது என்பதை மீண்டும் நிதர்சனமாகக் காண முடிகிறது.

யுத்தச் செலவைச் சமாளிக்க சிங்கள மக்களிடம் இருந்து பாதுகாப்பு நிதியும் திரட்ட ஆரம்பிக்கப்பட்டு விட்டது. எனவே, தர்க்க ரீதியாகப் பார்க்கும்போது யுத்தம் அரசுக்கும் புலிகளுக்கும் மட்டுமல்ல; சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலுமானது என்பது ஒடையின் தெளிந்த நீராகத் தெரிகிறது.

ஏற்கனவே 1983 முதல் 1987 வரை பாதுகாப்புச் செலவுக்காக பெருந்தொகை செலவிடப்பட்டது வீண்: மோதலைத் தவிர்த்து அந்தப் பணத்தை அபிவிருத்திக்குச் செலவிட்டிருப்பின் நாடு சிறப்புற்றிருக்கும் என்று பேசிய சித்தாந்தம் எல்லாம் ஜனாதிபதிக்கும் அரசினருக்கும் இப்போது மறந்து போயிற்று ஏன்? தமிழர்களை அடக்கி ஆள வேண்டும் அல்லது அழிக்க வேண்டும் என்ற சுயபுத்தி அவர்கள் இரத்தத்தைக் கொதிக்கச் செய்து போர்க் கோலம் பூள வைத்துள்ளது

அவர்களின் இரத்தம் கொதிககட்டும்; அது வேறு விடயம் நாட்டு மக்களில் 70 சதவீதமானோர் வறுமைக் கோட்டின் கீழ் மட்டத்தில் வாழும் அளவுக்கு நாட்டுப் பொருளாதாரம் சீரழிந்து போயுள்ளதே; பாதுகாபபுச் செலவுக்குக் கோடி கோடியாக எங்கிருந்து பணம் வருகிறது;

அபிவிருத்தி வேலைகளுக்கு, பொருளாதார நடவடிக்கைகளுக்கென்று உலக நாடுகள் பலவும் கொடுக்கும் பணத்தையே அரசாங்கம் தமிழர்களை அழிப்பதற்குப் பயன்படுத்துகிறது. இது குறித்து உலக நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் பணத்தைக் கொண்டு, ஓர் இனத்தை அழிப்பதற்கு நீங்கள் இலங்கை அரசுக்கு, சிங்கள மக்களுக்கு அனுமதி அளித்தீர்களா? இல்லையென்றால், அதன் யுத்த நடவடிக்கையை, இனப்படுகொலை முயற்சியைத் தடுத்து நிறுத்துங்கள். அதற்கு அரசு செவிசாய்க்கவில்லை என்றால் நீங்கள் வழங்கிய பணத்தை உடன் திரும்பப் பெறுங்கள் என்று சர்வதேசங்களையும் ஈழத் தமிழ் இனத்தின் பேரால் கேட்டுக் கொள்கிறோம்.

# இலங்கை யுத்த நிலைமை குறித்து பிரதமர் சிங் தலைமையில் ஆராய்வு

## வட.கிழக்கு பின்னணிகளை கருணாநிதி விளக்கினார்

புதுடில்லி ஜூன் 21

இலங்கை யுத்த நிலைமை குறித்துபிரதமர் சிங் தலைமையில் நேற்று முன்தினம் புதுடில்லியில் நடந்த ஒரு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பல முதலமைச்சர்கள், தேசிய முன்னணியின் தலைவர்கள், தேசிய முன்னணியை ஆதரிக்கும் நேசக் கட்சிகளின் தலைவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கை நெருக்கடி பற்றி அவர்களிடம் இருந்து ஆலோசனைகளை பிரதமர் வி. பி. சிங் கேட்டறிந்து கொண்டார்.

மோசமடைந்து வரும் இலங்கை நெருக்கடி குறித்து சகலரும் இக் கூட்டத்தில் கவலை தெரிவித்தனர்.

இலங்கை தமிழர் பிரச்சினையி கடந்த காலம், தற்போதைய நிலைமை பற்றிய விவரங்களை தமிழக முதலமைச்சர் கருணாநிதி இக் கூட்டத்தில் வெளியிட்டார். (அ-எ)

## கொழும்பில் 15 ஆயிரம் வடக்கு-கிழக்கு அகதிகள்

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் தமிழ் மக்கள் கொழும்பு மாநகரில் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

தற்சமயம் எழுந்துள்ள நிலைமை காரணமாக வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு இவர்கள் திரும்ப முடியாத நிலையில் கொழும்பில் தங்கியிருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. (இ-எ)

# வடக்கு - கிழக்கிற்கு அத்தியாவசிய சேவை நாயகம்

## ஜனாதிபதி நியமிப்பாராம்

கொழும்பு, ஜூன் 21

வடக்கு-கிழக்குப் பகுதியில் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்திற்குப் பொறுப்பாக அத்தியாவசிய சேவையாளர் நாயகம் ஒருவரை நியமிப்பது என்று ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்

அத்தியாவசிய பொருள்கள் விநியோகத்திற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன என்று ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிராட்மன் வீரக்கூன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கொழும்பிற்கு அகதிகளாக வந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மீண்டும் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர் என்றும் திரு வீரக்கூன் சொன்னார். (அ-எ)

# அடுத்த சில மாதங்களில் மேலும் 4 ஆயிரம் பஸ்கள் சேவையில்

அடுத்த சில மாதங்களில் மேலும் 4 ஆயிரம் பஸ்கள் சேவைக்கு விடப்படவுள்ளன.

2 ஆயிரம் பஸ்களைக் கொள்வனவுசெய்வதற்காக கேள்விப் பத்திரச் சபை அமைக்கப்பட்டுள்ளது

தனியார்துறையினரும் மேலும் 2 ஆயிரம் பஸ்களை கொள்வனவுசெய்துசேவைக்கு விடவுள்ளனர்.

இன்னும் 2 ஆயிரம் பஸ்களைத் திருத்திசேவைக்குவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் விஜே பாலமென்டிஸ் இத்தகவல்களை வெளியிட்டார். [ஒ-எ]

# களுவாஞ்சிக்குடிப் பகுதி புதிய இராணுவப் பிரிவின் கீழ்

களுவாஞ்சிக்குடி பிரதேசத்தை துரித நடவடிக்கைப் பிரிவு என்ற புதிய ஆயுதப் படைப் பிரிவே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது

இப்புதிய பிரிவு ஆங்கிலத்தில் Rapid DePloyment Force என்று அழைக்கப்படுகிறது.

ஏற்கனவே விசேட அதிரடிப்படை ஒன்று இயங்கி வருகிறது.

இது SpecialTask Force என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது.

இப்படி கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

# சுன்னாகம் அகதிகளுக்கு நிவாரணமளிக்க நடவடிக்கை

சுன்னாகம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது தங்கி உள்ள அகதிகளுக்கு இன்று நிவாரணம் வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது

காங்கேசன்துறை, கீரிமலை கொல்லங்கலட்டி, கட்டுவன், குரும்பசிட்டி போன்ற இடங்களில் இருந்து பல குடும்பங்கள் சுன்னாகம் வந்து தனியார் வீடுகளிலும், கோவில்களிலும், தேவாலயங்களிலும் தங்கி உள்ளன.

இவர்களுக்கு பொதுமக்களும் உதவி அளித்து வருகின்றனர். (இ-89)

# திருமலை நகரை இராணுவம் கைப்பற்றி விட்டதாகத் தகவல்

கொழும்பு, ஜூன் 21

கடும் சண்டையின் பின்னர் திருகோணமலை நகரத்தை இராணுவம் கைப்பற்றிவிட்டதாகராய்ட்டர்செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

இதனிடையே அரசு அறிக்கை ஒன்று தெரிவிப்பதாவது;

கடந்த திங்கள் மாலை திருமலை பிரெட்ரிக் கோட்டை இராணுவ முகாம் மீது கடலில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது

லேஸர் தேட்டாக்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இராணுவவீரர்கள் எவரும் காயமடையவில்லை பதினைந்து நிமிடங்கள் இச் சண்டை நீடித்தது.

இப்படி அரசு அறிக்கை தெரிவித்தது. (இ-9)

## ஹெலி சூட்டு காயம்

குருநகர், ஜூன் 21

கடந்த திங்கட்கிழமை வவுனியாவில் ஹெலி சூட்டில் கையில் பலத்த காயத்துக்குள்ளான ஸ்ரான்லி பெர்னான்டோ (வயது 24) கடற்கரை வீதி, திருச்சிலுவை சுகநல சேவை நிலையத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ். அரசினர்வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு பின்பு திருச்சிலுவை சுகநல நிலையத்துக்கு இடமாற்றப்பட்டிருந்தார்.

இவரது குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் மேற்படி தாக்குதலில் கொல்லப்பட்டு விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## கென்ட் பண்ணையிலும் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 21

பதவியாவில் கென்ட் பண்ணை, ஜபாகுபுர பகுதி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

பொலன்னறுவ, கதுருவெலன்பகுதியில் எரிந்தநிலையில் மனித சடலம் ஒன்று காணப்பட்டது.

இப்படி அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது (இ எ)

## நேற்றைய போட்டிகளின் முடிவுகள்

மிலான், ஜூன் 21

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள் வருமாறு;

**'எ' பிரிவு:**

இத்தாலி அணி 2-0 கோல்களால் செக்கோ சிலவாக்கியானைத்தோற்கடித்தது

ஆஸ்திரிய 2-1 கோல்களால் அமெரிக்காவை தோற்கடித்தது

**'டி' பிரிவு:**

யூகோஸ்லேவியா அணி 4-1 கோல்களால் ஐக்கிய அரபு எமிறேற்சு அணியைத் தோற்கடித்தது

மேற்கு ஜேர்மனி- கொலம்பியா மோதல் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. இருதரப்பினரும் தலா ஒரு கோல்போட்டனர் (அ-எ)

### யாழ். நோக்கி

# லொறியில் வந்தோரின் நகை, பணம், கொள்ளை

கொழும்பு ஜூன் 21

லொறி ஒன்றில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட 80 பயணிகளிடமிருந்து இரண்டு இளைஞர்கள் அடங்கிய கோஷ்டிபுத்தளத்தில் வைத்து நகைகள், ரொக்கப்பணம் ஆகியவற்றைக் கொள்ளை அடித்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

ஆண்களும் பெண்களுமாக எண்பது பயணிகளுடன் இந்த லொறி கொழும்பில் இருந்து கடந்த திங்கட்கிழமை புறப்பட்டது.

புத்தளத்தை லொறி அடைந்த போது இரவு எட்டு மணியானது.

பயணத்தைத் தொடர முடியாது பயணிகள் புத்தளம் நவின சந்தையில் அன்று இரவு தங்கினர்.

அச் சமயத்தில் இரண்டு இளைஞர்கள் அங்கு சென்று ஆயுத முனையில் பயணிகளை லொறியில் ஏறும்படி பணித்தனர்.

மனித சஞ்சாரமற்ற இடத்துக்கு லொறி சென்றதும், பயணிகள் அந்த இடத்தில் இறக்கப்பட்டனர்.

பின்னர் பயணிகளிடமிருந்த நகைகள், ரொக்கப் பணம் ஆகியன கொள்ளை இடப்பட்டன.

கொள்ளையடிக்கப்பட்ட உடைமைகளின் பெறுமதி 2 லட்சம் ரூபாவிற்கு மேலாகும் என்று சொல்லப்பட்டது. (இ-..)

## ஒலியும் அன்பளிப்பு

கொழும்பு, ஜூன் 21

தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபயகுணசேகரா மேல் மாகாணசபை உறுப்பினர் பதவி மூலம் கிடைக்கும் தனது ஒரு மாதச் சம்பளத்தை தேசிய பாதுகாப்பு நிதிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். [ம-இ]

## பளையிலும் அகதிகள்

பச்சிலைப்பள்ளி, ஜூன் 21

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்று வரும் ஷெல் தாக்குதல்களை அடுத்து அகதிகளாக ... பகுதியிலும் தங்கி உள்ளனர். (இ-117)

## கொலைஞரை பிடிக்க தனிக்குழு

சென்னை, ஜூன் 21

ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தினர் 16 பேர் கொலை செய்யப்படுவதற்கு காரணமாகவிருந்த கொலைஞர்களைப் பிடிப்பதற்கு தனி பொலீஸ் குழு ஒன்றை தமிழக அரசு நியமித்திருக்கிறது.

இந்தக்குழுவுக்கு தமிழக பொலீஸ் மாஅதிபர் வோல்ட்டர் தேவாரம் தலைமைவகிக்கிறார். [உ]

## தமிழக அரசின் செலவில் இன்று பூதவுடல்கள் அடக்கம்

திரு. பத்மநாபா, திரு. யோகசங்கரி, திரு. கிருபாகரன் உள்ளிட்ட 14 பேரின் பூதவுடல்கள் இன்று வியாழன் காலை சென்னை அரசினர் தோட்டம் பழைய ஆளுநர் மாளிகை முகப்பில்பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

இன்று மாலை மூன்று மணிக்கு அவர்களின் பூதவுடல்கள் கிருஷ்ணாம்பேட்டை மயானத்தில் அடக்கம்செய்யப்படும்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழக அரசு பொறுப்பேற்றுச் செய்கிறது.

இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள வசதியாக கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள [போராளிகளை விடுவிக்கும்படி ரெலோ-வின் ஸ்ரீஸ்கந்தா பிரிவு தமிழக அரசைக் கேட்டுள்ளது.

# டக்ளஸ் தேவானந்தா அணியினர் தாக்குதலை நடத்தியிருக்கலாம்!

## தமிழக பொலீஸ் அதிபர் துரை கருத்து

சென்னை, ஜூன் 21

சென்னை கோடம்பாககம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஈ. பி ஆர். எல். எவ். பிரமுகர்கள் மீது தாக்குதலை நடத்தியவர்கள் அந்த இயக்கத்தில் இருந்து வெளியேறிய இன்னொரு பிரிவாக இருக்கக் கூடும் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு பொலீஸ் அதிபர் பி. துரை இச் சந்தேகத்தை நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் அவர் சொன்னார்.

ஈ. பி. ஆர். எல். எவ். செயலதிபர் கே. பத்மநாபாவுடன் கருத்து வேறுபாடு கொண்டு வெளியேறிய டக்ளஸ் தேவானந்த அணியைச் சேர்ந்தவர்களே இத்தாக்குதலை நடத்தியிருக்கக் கூடும்.

ஈ.பி.ஆர் எல்.எவ் இயக்கத்தின் தலைமைப் பதவிக்கு பத்மநாபாவுக்குப் போட்டியாக டக்ளஸ் தேவானந்தா இருந்தார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் நடந்த வங்கிக் கொள்ளைச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து பத்மநாபாவிற்கும் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இலங்கையில் ஏனைய இயக்கங்களுடன் விடுதலைப் புலிகள் இயக்கம் கடும் போட்டியில் ஈடுபட்டிருந்தாலும் தமிழகத்தில் விடுதலைப்புலிகள் இது போன்ற குற்றச் செயல்களில் ஒருபோதும் ஈடுபட்டிருக்கவில்லை.

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் தங்கள் பாவனைக்கு சுசுகி போன்ற அதிவேக ஜீப்களையே பாவித்து வந்திருக்கின்றனர்.

ஆனால் கோடம்பாக்கம் சம்பவத்தில் தனியாரின் டாக்ஸி ஒன்றே பாவிக்கப்பட்டு உள்ளது

அனாதரவான நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட டாக்ஸியை இரசாயன பகுப்பாய்வாளர்கள் சோதனை செய்து வருகின்றார்கள். யார் இந்த டாக்ஸியை வாடகைக்கு அமர்த்தினர் என்பதை நிபுணர்களின் சோதனையைத் தொடர்ந்து வெளிவரலாம் இவ்வாறு திரு. பி. துரை மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

பத்பநாபாவின் சென்னை வருகை பற்றிய தகவலும் அவர் செவ்வாய் இரவு கூட்டத்தில் கலந்து கொள்ள விருந்தது பற்றிய தகவலும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன என்றும் —

இந்தத் தகவல்கள் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான போட்டிக் குழுவுக்கு மட்டுமே தெரிந்திருந்தன என்றும் கருதப்படுவதாக பி.பி.ஸி தனது கண்ணோட்டத்தில் தெரிவித்தது. (உ-எ)

## பலாலியிலிருந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து பீரங்கிப் படகுகள் மூலம் குண்டுகள் கிராமங்களை நோக்கி வீசப்பட்டன.

நேற்று தெல்லிப்பழைக்கு அப்பால் எவரும் செல்ல முடியாது இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை தெல்லிப் பளைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் நான்கு மணியளவில் பொம்மர் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

இந்தக் குண்டு வீச்சினால் தெல்லிப்பளை பிரதான வீதியில் உள்ள திருச்செல்வம் கடை முற்றாக எரிந்து நாசமானது.

இதேவேளை நேற்று காலையிலும், பிற்பகலிலும், தெல்லிப்பழை, கட்டுவன், மயிலிட்டி, வசாவிளான் ஆகிய பல இடங்களிலும் பரவலாக பொம்மர் குண்டு வீச்சு இடம்பெற்றது இரண்டு பொம்மர்கள் மாறி மாறி வந்து அடிக்கடி குண்டுகளைப் பொழிந்து தள்ளின.

இப் பகுதியில் ஹெலித் தாக்குதலும் தீவிரமாக நடத்தப்பட்டது ஹெலித் தாக்குதலால் யூனியன் கல்லூரிக்குச் சேதம் ஏற்பட்டது. (அ-இ-68 9)

# இறந்தோர் குடும்பங்களுக்கு ரூ. 15 லட்சம் நிவாரணம்

## முதல்வர் கருணாநிதி அறிவிப்பு

கோடம்பாக்கம் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணமாக 15 லட்சம் ரூபா முதலமைச்சர் நிதியில் இருந்து வழங்கப்படும் என்று திரு. கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

புதுடில்லியில் இருந்து நேற்றுக்காலை திரு. கருணாநிதி சென்னை திரும்பினார்.

அதற்கு முன்னர் கோடம்பாக்கம் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பிரதமர் சிங்குடன் பேச்சுக்கள் நடத்தியதாகதிரு. கருணாநிதி செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ)

# கொலைகளை கண்டித்து இ. காங்கிரஸ் பேரணி

ஈ. பி ஆர். எல். எப். பிரமுகர்கள் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் எதிர் வரும் திங்கட்கிழமை பேரணி ஒன்றை சென்னையில் நடத்த உள்ளது.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை காங்கிரஸ் தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்று ஆளுநரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பார்கள் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார். (ஒ-எ)

# கருணாநிதி அஞ்சலி

சென்னை, ஜூன் 21

படுகொலை செய்யப்பட்ட ஈ பி ஆர். எல்எவ்வின் செயலாளர் நாயகம் கே. பத்மநாபா மற்றும் யோகசங்கரி, கிருபாகரன் ஆகியோரினதும் ஏனைய உறுப்பினர்களினதும் பூதவுடல்களுக்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி நேற்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

நேற்று அவர் புதுடில்லியிலிருந்து சென்னை திரும்பியகையோடு, நேரடியாக ஆஸ்பத்திரிக்குச் சென்று இந்த சம்பவத்தில் காயமுற்றோருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் உயிரிழந்தோரின் பூதவுடல்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் (உ)

## பிரேமா அதிர்ச்சி

கொழும்பு, ஜூன் 21

சென்னையில் ஈ.பி ஆர். எல். எப். செயலதிபர் பத்மநாபா, யாழ். மாவட்ட எம்.பி யோகசங்கரி, மாகாண நிதி அமைச்சர் கிருபாகரன் உட்பட 14 பேர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்தார். [உ-எ]

## யோகசங்கரி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தனர்.

அச்சமயம் காரில் அங்கு சென்று இறங்கிய ஆறு பேர் கொண்ட கோஷ்டி ஒன்று கிரனேட்டுக்களால வீட்டைத் தாக்கினர் பின்னர் தானியங்கித் துப்பாக்கிகளால் சரமாரியாகச் சுட்டனராம்.

ஏ. கே. 47 ரகத் துப்பாக்கிகளே தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டன என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

தாக்குதலை முடித்துக் கொண்ட பின்னர் அக் கோஷ்டியினர் வந்த காரிலேயே ஏறி தப்பிச் சென்றனராம்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் கே.பத்மநாபா, மாகாண அமைச்சர் பி. கிருபாகரன், மாகாண சபை உறுப்பினர்கள் கோகுலராஜா, பத்மநாதன், யோகசங்கரி எம் பி., லிங்கேஸ், தர்மன், ரவி, சேரன், புவி, கமலக்கண்ணன், முகுந்தன், ...ஸ்கோ, கவிதா, ஜலிந்தா [இருவரும் பெண்கள்] ஆகியோர் உயிரிழந்தனர். [உ-எ]

# ஈழத் தமிழ் போராளி --

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரும்பிய திரு கருணாநிதி, சென்னையில் வைத்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

எந்தப் போராளிக் குழுக்களானாலும் அவர்கள் தங்களுக்குள் மோதுவதையோ, தமிழ்நாட்டில் வன்முறையில் ஈடுபடுவதையோ மாநில அரசு திட்டவட்டமாக அனுமதிக்காது என்று ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது.

ஆனாலும் இத்தகைய சம்பவங்கள் மின்னல் வேகத்தில் நடைபெற்று முடிந்துவிடுகின்றன.

### அனைத்துக்கட்சி மாநாடு

அதனால் தான் இனித் தமிழ்நாட்டில் ஆயுதங்களுடனோ ஆயுதங்கள் இன்றியோ எந்தப் போராளிக் குழுவும் தங்கவும் நடமாடவும் அனுமதிப்பதில்லை என்று முடிவுசெய்யப்பட்டிருக்கிறது

இந்த விடயம் பற்றி ஆராய்ந்து முடிவு செய்வதற்காக அனைத்துக்கட்சி மாநாடு ஒன்று விரைவில் கூட்டப்படும்.

மாநிலம் முழுவதும் எல்லா இடங்களிலும் பாதுகாப்பு பணிகளை வலுப்படுத்தும்படி மாநில அரசு பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டுள்ளது

போராளிகள் கடல் மார்க்கமாக தமிழ்நாட்டுக்குள் பிரவேசிப்பதைத் தடுக்க கடலோரக் காவலைத் தீவிரப்படுத்தும்படி நான் பிரதமர் சிங்கை நேற்றே கேட்டுக்கொண்டேன்.

விரைவில் ஏற்பாடு செய்வதாக பிரதமர் உறுதியளித்தார்.

— இப்படி திரு கருணாநிதி கூறினார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spoken English
ஆங்கிலம் பேச வேண்டும் என்ற விருப்பம்; ஆனால் தவறாகப் பேசிவிடுவோம் என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை. உளவியல் ரீதியில் 90 நாட்களில் ஆங்கிலம் பேசும் பயிற்சி.
விபரங்கட்கு:
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX. 162. COLOMBO, SRI LANKA.

# உதயன்

21 - 06 - 1990 வியாழக்கிழமை

Method of Book-keeping
கடை கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும் ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.
விபரங்கட்கு:-
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX, 162. COLOMBO, SRI LANKA.

## இரண்டாவது நாளாகநேற்றும் நகரம் வெறிச்சோடிய நிலையில்

யாழ். நகரப் பகுதியில் உள்ள அரச, தனியார் அலுவலகம் பாடசாலைகள் இரண்டாவது நாளாக நேற்றும் இயங்கவில்லை. இதனால் நகரம் நேற்றும் வெறிச்சோடியே காணப்பட்டது

யாழ். செயலகம், கல்வி அலுவலகம்உட்பட சகல திணைக்களங்களும் ஊழியர் வரவின்மையால் மூடிக்கிடந்தன.

யாழ். நகரப்பகுதிக் கடைகளும் மூடப்பட்டிருந்தன. மினிபஸ் சேவைகளும் குறைவாகவே இருந்தன.

கோட்டைப்பகுதியில் இருந்துஇடைஇடையே ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கி வேட்டுச்சத்தங்களும் கேட்டவண்ணம்இருந்தன. [எ-3]

## செவ்வாய் இரவுஷெல்களால் குருநகரில் பல வீடுகள் சேதம்

குருநகர் ஜூன் 21

செவ்வாய் இரவு யாழ் கோட்டை ராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களில் அதிகமானவை குருநகர் பகுதியிலேயே வீழ்ந்து வெடித்தன.

வீடுகள் பல சேதமடைந்துள்ளன. யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம், புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவையும் சேதமுற்றன.

குருநகர் கொண்டடி வீதியில் அந்தோனி யேசுதாஸன் வீடும், மவுண் கார்மேல் வீதியில் செல்லத்துரை லெய்டன், அந்தோனிமுத்து அமலதாஸ், பர்னாந்து இராசகுலம் ஆகியோரது வீடுகளும், –

றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியில் வலேரி குணம், புதிய கடற்கரை வீதியில் சூசைப்பிள்ளை மகராசம் பிள்ளை, இராசேந்திரா வீதியில் ஆர். அல்போன்சஸ், சென். பற்றிக்ஸ் வீதி ஒவியர் அ. மாற்கு ஆகியோர் களது வீடுகள் சேதமடைந்தன.

மவுண்கார்மல் வீதி அந்தோனிமுத்து அமலதாஸ் வீடு பலத்த சேதமானதுடன் வீட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி, டெக் என்பனவும் உடைந்தன.

இராசேந்திரா வீதி ஆர். அல்போசன்ஸ் என்பவரது வீட்டுத் தண்ணீர் தாங்கியில் வீழ்ந்த ஷெல் தண்ணீர் தாங்கியை முற்றாகச் சேதப்படுத்தி அயலில் உள்ள வீடுகளையும் உடைத்தது.

புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்திலும், அருகாமையிலுமாக இரு ஷெல்கள் அப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன. திருக்குடும்பக் கன்னியர் மடத்தின் பிரதான வீதி பக்கமும், மடம் வீதிப் பக்கமும் இரு ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியில் பட்டு, றீட்டா என்பவர்களது வீடுகளும் ஷெல் தாக்குதலால் சேதமடைந்தன.

வீடுகளில் இருந்து மக்கள் பெரும் அளவில் வெளியேறி இருந்ததால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டிருந்தன. (இ-5)

## பாதுகாப்புப் ஜனாதிபதியே

கொழும்பு, ஜூன் 21

இப்போது வடக்கு – கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தத்தில், பாதுகாப்புப் படைகளை ஜனாதிபதியே இயக்குகிறார். அவரின் பணிப்புகளுக்கு அமையவே படையினர் செயற்பட்டு வருகின்றனர்.

இப்படி ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிராட்மன் வீரக்கூன் நேற்றுச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு மக்களின் பாதுகாப்புக் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா அதிக அக்கறை கொண்டு உள்ளார்-

## படைகளை இயக்குகிறார்

வடக்கு – கிழக்குப் பகுதியில் சட்டமும், ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டதும் சுதந்திரமான முறையிலும் நேர்மையான முறையிலும் தேர்தல்களை நடத்த ஏற்பாடு செய்யப்படும் – என்றும் திரு. வீரக்கூன் தெரிவித்தார். [அ-எ]

## யாழ். ஆஸ்பத்திரி மானிப்பாயில் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 21

தற்காலிகமாக மூடப்பட்ட யாழ்-போதனா வைத்தியசாலை நேற்று முதல் மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலையின் நூற்றாண்டு விழா கூட்டத்தில் இயங்க ஆரம்பித்தது.

வைத்தியசாலை டாக்டர்களும், தாதிமார்களும், ஊழியர்களும் அங்கு கடமைக்கு சமூகமளித்திருந்தனர்.

நாற்பதிற்கும் மேற்பட்ட நோயாளிகள் தற்போது அங்கு சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர். சத்திர சிகிச்சை முதல் சகல சிகிச்சைகளும் அங்கு அளிக்கப்படுகிறது.

போதனா வைத்தியசாலைக்கு வர முடியாத சகல ஊழியர்களையும் உடன் மானிப்பாய் வைத்தியசாலைக்கு வருமாறு வைத்தியசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-3-9)

## மரண அறிவித்தல்

### தி. இராசகோபால் (உருத்திரா)

(உதவி தபால் அதிபர், கொக்குவில்)

நல்லூர் செட்டித் தெருவைச் சேர்ந்தவரும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் உதவித் தபால் அதிபரும் 'வளர்மதி முன்னேற்ற சழக' ஆலோசகருமான தில்லையம்பலம் இராசகோபால் காலமானார்.

இவர் ஜெயதேவியின் அன்புக் கணவரும் பிரதீபன், பகிரதி, அபிராமி, சர்வேசன், சிவசங்கர், கங்கேசன், ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி வசந்தி சபாநாயகம், திருமதி டாக்டர் கமலா சிங்கநாயகம், நடேசன் (யாழ். கச்சேரி), சிறிகாந்தா, ஆகியோரின் சகோதரரும் திருமதி கருணாதேவிவிஜயராஜா, திருமதிஹரிமளா தேவி கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21-6-90) காலை 10 மணிக்கு நடைபெறும்.

சம்பியன் லேன்
கொக்குவில்-கிழக்கு

தகவல்
மனைவி, பிள்ளை
சகோதரர்கள்
(13515)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பதுக்கல், விலை அதிகரிப்பில் ஈடுபடும்

# வர்த்தகர்கள் குறித்து புலிகளிடம் முறைப்பாடு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 21

அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கி வைக்க வேண்டாம் என்றும் விலை கூட்டி விற்க வேண்டாம் என்றும் தமிழ்ப் பகுதிகளில் உள்ள வர்த்தகர்களை, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

பதுக்கல், விலை அதிகரிப்பில் ஈடுபடும் வர்த்தகர்கள் குறித்துத் தம்மிடம் முறையிடுமாறும் முன்னணி பொது மக்களிடம் கோரியுள்ளது.

இது சம்பந்தமாக, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

பொருள்களைப் பதுக்கி வைப்பதும், விலை கூட்டி விற்பதும் சமூக விரோதச் செயல்களே.

மக்களின் அத்தியாவசிய பொருள்களான அரிசி, சீனி, மா, மண்ணெண்ணை போன்ற அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கி வைப்பதும் விலை அதிகமாக விற்பதும் சமூக விரோதச் செயல்களே.

இத்தகைய செயல்கள் மக்களைப் பாரதூரமாகப் பாதிக்கச் செய்யும்.

அதிக விலைக்கு விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் வர்த்தகர்கள் அதற்கான காரணங்களை எமது மாவட்ட அலுவலகங்களில் கூறி அனுமதியைப் பெற்றுக் கொண்டே விற்கவேண்டும்.

### பொதுமக்களுக்கு வேண்டுகோள்

மேற்கூறப்பட்டவாறு நடைபெறும் செயற்பாடுகள் பற்றிய விவரங்களை அல்லது குறைபாடுகளை உடனுக்குடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதேச செயலகங்கள் அல்லது மாவட்டச் செயலகங்களுக்கு அறிவிக்கும்படி வேண்டுகிறோம் — என்று உள்ளது. (அ-உ)

## ஆசிரியர்களின் சம்பளம் தாமதமாகவே கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான இம் மாதச் சம்பளம் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பளம் வழங்கத் தேவையான பணத்தை மாகாண சபையே இதுவரை மாதாந்தம் அனுப்பி வந்தது ஆனால் இம்மாதச் சம்பளத்துக்குரிய பணம் இதுவரை அனுப்பப்படவும் இல்லை; எந்தத் தகவலும் கிடைக்கவும் இல்லை.

இதனால் சம்பளம் வழங்க முடியாதுள்ளதாக யாழ். கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார், (ஒ-3-9)

## தொண்டு செய்ய வருமாறு யாழ்.செஞ்சிலுவை அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தொண்டு செய்ய வருமாறு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் அதன் அங்கத்தவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறது.

சம்பந்தப்பட்டவர்கள் தமது விவரங்களை சுண்டிக்குளியிலுள்ள செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் விவரங்களை தந்துதவுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

நிவாரண மற்றும் வைத்திய சேவைகள் வழங்கவே தொண்டர்கள் தேவைப்படுகிறார்கள் என்று சங்கத்தின் தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (ஒ)

## யாழ். சமூகசேவைப் பகுதி பணியாளருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். செயலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களையும் சமூகசேவைப்பகுதி அதிகாரிகளையும் இன்று வியாழக்கிழமை அலுவலகத்துக்கு சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களாக செயலகம் இயங்காததால் ஊழியர்களோ, அதிகாரிகளோ கடமைக்குச் சமூகமளிப்பதில்லை.

தற்போது அவசர வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாலேயே அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

## உணவு-எரிபொருள்-மருந்து தட்டுப்பாட்டை நீக்க முயற்சி

### அரச அதிபர் தலைமையில் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்டத்தில் நிலவும் உணவு, எரிபொருள், மருந்து வகைகள் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க அவசர நடவடிக்கைகள் எடுப்பதென நேற்று திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட நிலை குறித்து ஆராய திருநெல்வேலியிலுள்ள நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கூட்டம் ஒன்று நேற்றுக் காலை நடைபெற்றது.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அப்போதே உணவு, எரிபொருள், மருந்து தட்டுப்பாடை நீக்க அவசர நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் மாக் கப்பலில் இருந்து மாவை இறக்கும் முயற்சி மேற்கொள்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

பதற்றம் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஒருவாரத்துக்கு உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கும் வேலைகளை துரிதமாக்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

### திருநெல்வேலியில் இலவச சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 21

தாக்குதல் சம்பவங்களில் சிக்கி காயப்பட்டு வருபவர்களுக்கு திருநெல்வேலி சென்றல் நேர்சிங் ஹோமில் இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.

யாழ் போதனா வைத்தியசாலை மூடப்பட்டதை அடுத்து அங்கு கடமையாற்றும் மூன்று டாக்டர்கள் தாக்குதல் சம்பவங்களில் காயப்பட்டு வருபவர்களுக்கு இங்கே வைத்து சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

சிகிச்சைக்கான மருந்துகளை யாழ் போதனா வைத்தியசாலை வழங்கி வருகிறது. நேற்று மட்டும் [illegible] அதிகமான நோயாளர்களுக்கு இங்கு சிகிச்சை [illegible] டது. (உ-மு-3)

### கிரானுக்கு இராணுவம்

கொழும்பு, ஜூன் 21

மட்டக்களப்பு கிரான் முகாமுக்கு இலங்கை இராணுவ அணி வாகனங்கள் செவ்வாய் பிற்பகல் ஒரு மணி அளவில் சென்றடைந்ததாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

### ஹோட்டல் அசோக்கும் சேதம்

கோட்டைக்குச் சமீபமாகவுள்ள ஹோட்டல் அசோக் பொம்மர், ஹெலி தாக்குதல்களால் சேதமடைந்துள்ளது.

ஹோட்டலின் ஜன்னல் கண்ணாடிகள், குளிர்சாதனக் கருவிகள், நீர்த்தாங்கிகள் போன்றவை பலத்த சே[illegible] லட்சக் கணக்கான ரூபா [illegible] யப்படுகிறது. (ஒ-3)

### கல்முனை புலிகளின் கட்டுப்பாட்டில்

கொழும்பு, ஜூன் 21

கல்முனை நகரம் இன்னமும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி இவ்வாறு அறிவித்தது. [உ]

### பலாலியில் 2 சிப்பாய்கள் மரணம்

கொழும்பு, ஜூன் 21

பலாலி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில்இரண்டுஇராணுவ சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [உ-எ]

### மனித எலும்புக் கூடுகள்

பச்சிலைப்பள்ளி, ஜூன் 21

சாவகச்சேரி பொதுச் சந்தையில் குழிவெட்டும் போது இரண்டு மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

இந்த எலும்புக் கூடுகள் 1987 அக்டோபரில் இந்தியப் படையினரின் ஹெலித் தாக்குதலின்போது இறந்தவர்களினுடையதாக இருக்கலாமென நம்பப்படுகிறது. (ஒ-117)

### ஆரைப்பற்றில் அகதிகள்

கொழும்பு, ஜூன் 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரைப்பற்றுப்பகுதியில் மட்டும்சுமார் 20ஆயிரம் தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர். (இ-எ)

## கிழக்கில் பாதிப்புற்றோருக்கு நிவாரணம் வழங்க அரசு திட்டம்

கொழும்பு, ஜூன் 21

கிழக்கு மாகாணத்தில் தற்போது எழுந்துள்ள நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு அரசு திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உணவுப்பொருள், துணிவகை மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்குத் தேவையான பணத்தை மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு மட்டக்களப்பு, திருகோணமலை பொலன்னறுவை அரச அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி நேற்று முன் தினம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அமைச்சுச் செயலாளர், சமூக சேவைப்பணிப்பாளர் ஆகியோருக்கு அமைச்சர் பணிப்புரைகளை விடுத்திருக்கிறார். (இ-எ)



கடந்த சனிக்கிழமை கோட்டை இராணுவத்தினர் நடத்திய அகோர ஷெல் வீச்சுக்கு இரையானோரில் இருவரின் சடலங்கள் மேலே அடுத்தடுத்து காணப்படுகின்றன. முதலாவது படத்தில் காணப்படுபவர் டாக்டர் சபாரத்தினம் ஆவார். சாந்தி தியேட்டருக்கு அருகே மரணமான சிவலிங்கம் என அழைக்கப்படுபவரின் சடலத்தை இரண்டாவதாகக் காணலாம்.

மூன்றாவதாக காணப்படும் சடலம் வெள்ளியன்று மயிலிட்டியில் ஹெலி மோட்டார் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி மரணமான செல்வி. றேமினி (வயது 16) ஆவார். (ஒ-10)

## பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு

# தொண்டர் நிறுவனங்கள் இன்று நேரில் விஜயம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி மதிப்பீடு செய்யவும், நிவாரண உதவிகளை மேற்கொள்ளவும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூன்றாகப் பிரிந்து இன்று சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்ய உள்ளன.

ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களுக்கு அண்மித்த பகுதிகளில் குடியிருப்போர் பொம்பர் தாக்குதல், ஹெலித் தாக்குதல், ஷெல்தாக்குதல் போன்ற காரணங்களால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள நிலையை நேற்றுக் கூடிய பல அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆராய்ந்தன.

சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை, மானிப்பாய் பகுதிகளுக்கு அகதிகள் புனர்வாழ்வு, கழகமும், சர்வோதயமும் –

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்ப் பகுதிகளுக்கு குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் அகதிகள் புனர்வாழ்வு நிதியம், 1983 ஆம் உறியடெக் நிறுவனம் ஆகியனவும் –

காரைநகர், சங்கானை பகுதிகளுக்கு செஞ்சிலுவை, றெட்பானா ஸ் தாபனங்களும் – நேரில் சென்று பார்த்து நடவடிக்கை எடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சுகாதார ஏற்பாடுகள் சம்பந்தமாக அந்தந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரிகளது உதவிகளைப் பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## ஆனையிறவு இராணுவ முகாமில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஆனையிறவு இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினர் வாகனங்களில் வரும் பிரயாணிகளைச் சோதனையிடுவதுடன் அவர்களைத் தாக்கவும்முயல்கிறார்களாம்.

வாகனங்களில் வரும் பிரயாணிகளின் உடைமைகளைச் சோதனையிட்டு, அடையாள அட்டை கேட்டுத் தாக்குவதாக வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பயணிகள் தெரிவித்தனர். (ஒ-3)

## கிளிநொச்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஷெல் தாக்குதல் காரணமாக இரவு நேரங்களில் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று தங்குகின்றனர். (ஒ-3)

## கோமாரி படையினர் கட்டுப்பாட்டில்

கொழும்பு, ஜூன் 21

கிழக்கு மாகாணத்தில் கோமாரி, திருக்கோவில் ஆகிய பகுதிகளை விசேட அதிரடிப் படை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருப்பதாக இலங்கை அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org